| Headline | TNB's Mesra Rakyat project ensures new homes for the hardcore | | |
|---|---|---|---|
| MediaTitle | Malaysian Nanban | | |
| Date | 26 Nov 2016 | Language | Tamil |
| Circulation | 65,000 | Readership | 415,000 |
| Section | News | Page No | 3 |
| ArticleSize | 882 cm² | Journalist | NULL |
| PR Value | RM 15,395 | | |
| | | | |



# ஏழைகளின் வாழ்க்கையிலும் விளக்கேற்றும் தேசிய மின்சார வாரியம்!





மலேசியாவின் எல்லா மூலை முடுக்குகளிலும் இயன்றவரை இருளை அகற்றி ஒளியேற்றும் மின்சாரத்தை வழங்குவது ஒன்றுதான் நமது தேசிய மின்சார வாரியத்தின் பணி என பலர் நினைக்கின்றார்கள்.

ஆனால், பின்தங்கிய நிலையில் உள்ளவர்கள் பலரது வாழ்க்கையிலும் ஒளியேற்றுவதை மின்சார வாரியம் தனது வழக்கமாகக் கொண்டுள்ளதை பலர் அறிந்திருக்கமாட்டார்கள்.

தனித்து வாழும் தாய்மார்கள், முதியவர்கள், உடற்பேறு குறைந்த மாற்றுத் திறனாளிகள், ஏழ்மையில் வாடுபவர்கள் போன்ற பிரிவினரை ஒவ்வொரு மாநிலத்திலும் அடையாளம் கண்டு அவர்கள் மற்றவர்களைப் போல நல்ல வாழ்க்கை வாழ வீடுகள் கட்டிக் கொடுப்பதையும், மின்சார வாரியம் வழக்கமாகக் கொண்டுள்ளது.

2013 முதல் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 1.92 மில்லியன் ரிங்கிட் செலவில் 92 வீடுகளைப் பழுது பார்த்து சீர்ப்படுத்தியும், புதிதாக கட்டியும் கொடுத்திருக்கிறது மின்சார வாரியம்.

அந்த வகையில் இந்த மாதம் சிகாமாட்டிலுள்ள, ஜெமிந்தா கம்போங் பாருவில் 3 பேரப்பிள்ளைகளுடன் ஏழ்மையில் வாடும் எஸ்.வள்ளியம்மா என்ற 63 வயது பெண்மணியின் வாழ்க்கையிலும் ஒளியேற்றியிருக்கிறது மின்சார வாரியம்.

மிகவும் மோசமாகப் பாதிப்படைந்த நிலையில் இருந்த வள்ளியம்மாவின் வீட்டை 50,000 ரிங்கிட் செலவில் ஒரு மாத கால அவகாசத்தில் கட்டிக் கொடுத்து அவரது வாழ்க்கையையே மாற்றியமைத்திருக்கிறது மின்சார வாரியம்.

வள்ளியம்மாவின் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதில் துணையாக இருந்தவர்கள், சிகாமாட் நாடாளுமன்ற உறுப்பினரும், சுகாதார அமைச்சருமான டத்தோஸ்ரீ டாக்டர் சுப்ரமணியமும், தேசிய மின்சார வாரியத்தின் இயக்குநர் டத்தோ அ.சக்திவேலுவும்தான்.





இந்த நிகழ்ச்சியில் தேசிய மின்சார வாரியத்தின் போக்குவரத்து பிரிவின் உயர்நிலை நிர்வாகி டத்தோ விஸ்வநாதனும் கலந்து கொண்டார்.

நாடு முழுமையிலும் ஆற்றி வரும் எத்தனையோ மக்கள் பணிகளில், சமுதாய சேவைகளில், ஓர் உதாரணம்தான் வள்ளியம்மா வீட்டைக் கட்டிக் கொடுத்து, அவரது வாழ்வில் தேசிய மின்சார வாரியம் ஒளியேற்றிய இந்த சம்பவம்.














Powered by: iSENTIA